வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

நாள் 16.04.2024 செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.30 மணி

---

தலைப்புச் செய்திகள்

- புதுச்சேரி-தமிழ்நாடு உட்பட 21 மாநிலங்களின் 102 தொகுதிகளில், வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ள முதல்கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம், நாளையுடன் முடிவிற்கு வரவுள்ளது.
- மூத்த பிஜேபி தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று பீகார் மற்றும் மேற்கு வங்கத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.
- கடந்த நிதியாண்டில் நாட்டின் ஏற்றுமதி, 776.68 பில்லியன் டாலராக அதிகரித்து இருப்பதாக, மத்திய அரசு, மதிப்பீடு வெளியிட்டுள்ளது.
- நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 5 நாட்களில், 2ஆவது முறையாக மீண்டும் வெப்ப அலை வீசக்கூடும் என இந்திய வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது.

பிரச்சாரம் (17)

புதுச்சேரி-தமிழ்நாடு உட்பட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில், வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ள முதல்கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் நாளையுடன் முடிவடையும் நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள், தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு உள்ளனர். மூத்த பிஜேபி தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று பீகார் மாநிலம், கயாவில் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில், காங்கிரசும் அதன் தோழமைக் கட்சிகளும், அரசியல் சாசனத்தை அரசியல் ஆதாயத்திற்கான கருவியாகப் பயன்படுத்த முயலுவதாக குற்றம் சாட்டினார். தேசிய

அரசியல் சாசன தினத்தை நிறுவியதன் மூலம், பாரதீய ஜனதா கட்சி தான், நிஜமான அரசியல் சாசன உணர்வை மக்கள் மனங்களில் விதைத்து இருப்பதாகவும், அரசியல் சாசனத்தை எவரும் மாற்றிவிட முடியாது என்றும் கூறினார். பீகாரின் வறுமை நிலைக்கு, முன்பிருந்த ஆர்ஜேடி அரசுதான் காரணம் என்றும், அவர் குற்றம் சாட்டினார். தொடர்ந்து பீகார் மாநிலம், பூர்ணியா பகுதியிலும், இன்று திரு. நரேந்திர மோடி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மேற்கு வங்க மாநிலம், பாலூர்காட், ராய்கஞ்ச் ஆகிய இடங்களிலும், பிரச்சாரப் பொதுக்கூட்டங்களிலும் அவர் உரையாற்றினார்.

<u>பிரதமர் அஸ்ஸாம் (11)</u>

மூத்த பிஜேபி தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, அஸ்ஸாமில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்வதற்காக, இன்று மாலை குவஹாத்தி சென்றடைகிறார். நாளைய தினம், நல்பாரியில், தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்ற இருக்கிறார். இதற்கிடையே, மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி பிரியங்கா வாத்ரா இன்று அஸ்ஸாம் மாநிலம் ஜோர்ஹாட் மாவட்டத்தில் சாலை பவனி நடத்தினார். மேற்கு வங்க முதலமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான செல்வி மம்தா பானர்ஜி, அஸ்ஸாம் மாநிலம் சில்சார் பகுதியில் நாளை தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். அஸ்ஸாமில் மொத்தம் உள்ள 14 மக்களவை தொகுதிகளுக்கு, 3 கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது.

<u>அனுராக் (11)</u>

ஜம்மு-காஷ்மீரில் சட்டமன்ற தேர்தல் இவ்வாண்டிலேயே நடத்தப்படும் என்றும், பிஜேபி இது குறித்து தெளிவாக இருப்பதாகவும், மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார். இன்று ஜம்மு-காஷ்மீரின் கிஷ்த்வார் நகரில் பிரசார் பாரதிக்கு அளித்த

பிரத்யேக பேட்டியில் அவர் இதை தெரிவித்தார். மோடி அரசின் 10 ஆண்டு கால ஆட்சியில் ஜம்மு காஷ்மீரில் எல்லா துறைகளிலும், அபார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார். முன்னதாக, பொதுக்கூட்டம் ஒன்றில் திரு. தாக்கூர் பேசுகையில், எதிர்க்கட்சியினர் கடந்த 70 ஆண்டுகளில் மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை என குற்றம் சாட்டினார்.

<u>யுபிஎஸ்சி (17)</u>

2023ஆம் ஆண்டு சிவில் சர்வீஸ் தேர்வுகளின் இறுதி முடிவுகளை யுபிஎஸ்சி இன்று வெளியிட்டுள்ளது. கான்பூர்-ஐஐடி பொறியியல் பட்டதாரி, ஆதித்யா ஸ்ரீவாஸ்தவா, சிவில் சர்வீஸ் தேர்வில் முதலிடம் பெற்றுள்ளார். அனிமேஷ் பிரதான் 2ஆம் இடமும், அநன்யா ரெட்டி 3ஆம் இடமும் பெற்றுள்ளனர். சிவில் சர்வீஸ் தேர்வில் முதல் 25 இடம் பிடித்தவர்களில் 10 பேர் பெண்கள். இம்முறை மொத்தம் 1,016 பேர் குடிமைப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் 352 பேர் பெண்கள்.

சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பு உணர்வின் பலன் இது என்றும், பொதுச் சேவையில் இவர்களின் முயற்சிகள், நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெறாதவர்களுக்கு, எதிர்கால வெற்றிக்குப் பல வாய்ப்புகள் இருப்பதாகவும், இவர்களின் திறமைகள் பளிச்சிட, வேறு பல வாய்ப்புகளும் இந்தியாவில் இருப்பதால், இவர்கள் தொடர்ந்து முயல வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏற்றுமதி (10)

2023-24ஆம் நிதியாண்டில் நாட்டின் ஒட்டு மொத்த ஏற்றுமதி, 776.68 பில்லியன் டாலராக அதிகரித்து இருப்பதாக, மத்திய தொழில் வர்த்தக அமைச்சகம் மதிப்பீடு வெளியிட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நிதியாண்டில் 776.40 பில்லியன் டாலராக இருந்தது. கடந்த நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த இறக்குமதி, 854.80 பில்லியன் டாலராக குறைந்து இருப்பதாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய நிதியாண்டின் இறக்குமதியை விட, 4.80 சதவிகிதம் குறைவாகும். ஏற்றுமதி அதிகரித்து இறக்குமதி குறைந்து இருப்பதால், ஒட்டு மொத்த வர்த்தகப் பற்றாக்குறை, 78.12 பில்லியன் டாலராக, கணிசமான அளவில் குறையும் என்றும் அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது.

வெப்ப அலை (14)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 5 நாட்களில், 2ஆவது முறையாக மீண்டும் வெப்ப அலை வீசக்கூடும் என இந்திய வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது. கோவா, குஜராத் மற்றும் மஹாராஷ்டிராவில் நாளை வரையிலும், வெப்ப அலை நீடிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. கிழக்கு கடற்கரையில், ஆந்திரா, தெலங்கானா மற்றும் புதுச்சேரியில், வரும் 18ஆம் தேதி வரையிலும், ஒடிஷா மற்றும் மேற்கு வங்கத்தில் வரும் 20ஆம் தேதி வரையிலும், வெப்ப அலை வீசக்கூடும் வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது. மேற்கு வங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஆந்திர பிரதேசத்தில் அடுத்த 5 நாட்களுக்கு அதிக வெப்பம் மற்றும் ஈரப்பதமான வானிலை நிலவும் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது. நாட்டின் மத்தியப் பகுதிகள் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் அடுத்த 3 நாட்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி அதிகமாக பதிவாகலாம் என்றும் வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது.

குலோத்துங்கன் 1 (18)

புதுச்சேரியில் நாளை மாலை 6 மணிக்கு தேர்தல் பிரச்சாரம் முடிந்த பின்னர், 48 மணி நேரத்திற்கு, எவரும், எவ்வித பிரச்சாரத்திலும் ஈடுபடக்கூடாது என மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். இன்று மாலை புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரச்சாரம் முடிந்த பின்னர், வெளி நபர்கள் புதுச்சேரியில் இருக்கக் கூடாது என்றும், வெளி நபர்களை வெளியேற்ற காவல்துறைக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் கூறினார். பிரச்சாரம் முடிந்த பின்னர், தேர்தல் நடத்தை நெறிமுறை மீறலைக் கண்காணிக்க சிறப்பு பறக்கும் படைகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும், இதையும் சேர்த்து 72 பறக்கும் படைகள் கண்காணிப்பு பணியில் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்தார்.

வாக்குப்பதிவு, வரும் 19ஆம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும் என்று திரு. குலோத்துங்கன் கூறினார். 2,587 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், மற்றும், 1,324 விவி-பாட் காகிதத் தணிக்கை இயந்திரங்கள், வாக்குப்பதிவிற்குப் பயன்படுத்தப்படும் என்றும், அவர் தெரிவித்தார்.

புதுச்சேரி மக்களவை தொகுதியில் மொத்தம் 60 வாக்குச்சாவடிகள் முற்றிலும் பெண் ஊழியர்களால் நிர்வகிக்கப்படும் என்றும், மாஹே

குலோத்துங்கன் 2 (8)

பகுதிக்கு உட்பட்ட அனைத்து வாக்குச் சாவடிகளும் இதில் அடங்கும் என்றும் மாவட்ட தேர்தல் அதிகாரி தெரிவித்தார். முற்றிலும் இளம் அரசு ஊழியர்கள் மூலம் 11 வாக்குச்சாவடிகளும், மாற்றுத் திறனாளி அரசு ஊழியர்கள் மூலம், 2 வாக்குச் சாவடிகளும் நிர்வகிக்கப்படும் என அவர் கூறினார். பிரச்சனைக்கு வாய்ப்பு அதிகம் உள்ள 211 வாக்குச் சாவடிகளில், 4 ஆயிரத்து 648 அரசு ஊழியர்கள் நுண் பார்வையாளர்களாக நியமிக்கப் படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## புதுச்சேரி 1 (16)

புதுச்சேரியில் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்குச்சாவடி சீட்டு வழங்கப் பட்டுள்ளதாகவும், இந்த சீட்டு இருந்தாலும், வாக்காளர்கள் வாக்களிக்க வரும்போது, வாக்காளர் அடையாள அட்டையை காண்பித்தல் அவசியம் என்றும், மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது. வாக்காளர் அடையாள அட்டையை தவறவிட்டவர்கள், ஆதார் அட்டை, ஊரக வேலை வாய்ப்பு அடையாள அட்டை, ஓய்வூதிய அட்டை உட்பட, தேர்தல் ஆணையத்தால் அனுமதிக்கப்பட்ட மாற்று அடையாள ஆவணங்களில் ஏதாவது ஒன்றைக் காட்டி வாக்களிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்க, காவல்துறை அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது. வாக்குச் சாவடிக்கு வரும் வாக்காளர்களின் வசதிக்காக, குடிநீர், நிழல் கொட்டகை, சாய்வு தளம் உட்பட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகள் மற்றும் உடல் நலம் குன்றியவர்கள், முன்னுரிமை அடிப்படையில் வாக்களிக்கலாம் என்றும், இவர்களுக்கு உதவும் பணிகளில் கல்லூரிகளைச் சேர்ந்த NSS மாணவர்கள் ஈடுபடுத்தப் படுவார்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஸ்வீப் (12)

புதுச்சேரியில் குறைந்த வாக்குப்பதிவுப் பகுதியாக கண்டறியப் பட்டுள்ள லாஸ்பேட், அவ்வை நகரில் வீடு வீடாகச் சென்று இன்று நடத்தப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரத்தை, மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் தொடக்கி வைத்தார். முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பிற்கான ஸ்வீப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இப்பணிகளின் போது, மாவட்ட தேர்தல் அதிகாரி, இரண்டு வீடுகளில் வாக்காளர்களை சந்தித்து, தமது தனிப்பட்ட தேர்தல் திருவிழா அழைப்பிதழை வழங்கினார். தேர்தலில் தவறாமல் வாக்களிக்க

வேண்டும் என்றும், மற்றவர்களை வாக்களிக்க அறிவுறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். முன்னதாக, அவ்வை நகர் பூங்காவில் நடைப் பயிற்சிக்கு வந்த சிலரிடமும், தேர்தல் திருவிழா அழைப்பிதழை திரு.குலோத்துங்கன் வழங்கினார்.

ஐபிஎல் (5)

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில், கொல்கத்தா-ராஜஸ்தான் அணிகள் மோதவுள்ளன. நேற்று இரவு, பெங்களூர்-ஹைதராபாத் அணிகளுக்கு இடையே, பெங்களூரில் நடைபெற்ற போட்டியில், ஹைதராபாத் அணி, 25 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சுகாதார அமைச்சகம் (15)

மத்திய அரசு ஊழியர்களுக்கான CGHS சுகாதார திட்டப் பதிவேடுகளை, ஆயுஷ்மான் பாரத் ABHA அட்டையுடன் இணைக்கும் நடவடிக்கை, பயனாளிகளின் மருத்துவ ஆவணங்களை அவர்களின் மொபைல் தொலைபேசியில் கிடைக்கச் செய்வதே நோக்கம் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த இணைப்பிற்கும், மக்களுக்கான அரசின் நிதியுதவித் திட்டங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதால், மக்களின் நிதி செயல்பாடுகளைக் கண்காணிக்க, ABHA எண்ணை அரசு பயன்படுத்துவதாக கூறப்படுவது தவறானது என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. சுகாதார சேவையில் ஆதார் எண்ணுக்கு நிகரானது ABHA எண் என்றும், எல்லா மருத்துவமனைகளிலும், எல்லா குடிமக்களும் பயன்படுத்த தக்கதாக ABHA எண்ணை மாற்றுவதே அரசின் குறிக்கோள் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது. இதில், மறைக்க வேண்டிய உள்நோக்கம் எதுவும் அரசுக்கு இல்லை என்பதால், தவறான தகவல்களைப் பரப்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.